# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

விலை: 1 ரூபா

கட்டணம்
இலங்கை
ஒரு ஆண்டு 60-00
அரை ஆண்டு 30-00
இந்தியா
ஒரு ஆண்டு 75-00
ஏனைய நாடுகள்
ஒரு ஆண்டு
15 அமெரிக்க டொலர்

கதிர் 1, திருவள்ளுவராண்டு 2011, 31—10—80, வெள்ளிக்கிழமை, ஒளி—5


UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS RECEIVED 1980-12-1 PERIODICALS DIVISION LIBRARY

# திருமலையில் தமிழர் வரலாற்றுத் தடயங்கள்

# அழிக்கப்படுகின்றன!

## சிங்கள ஏகாதிபத்தியத்தின் மீது

## திருமலை சம்பந்தன் சீற்றம்!

**"வரலாற்றுப் பெருமைமிக்க — கோணேஸ்வரத்தில் உள்ள — பாபநாசம் தீர்த்தக் கிணற்றை வெறிபிடித்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் பொலிஸ் படையினர் இரு தடவைகள் உடைத்து நொறுக்கியிருக்கிறார்கள். தமிழர்களின் வரலாற்றுத் தடயங்களை அழித்துவரும் இனவெறி ஆட்சியாளரின் வெறியாட்டத்துக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்."**

மத்திய கலாச்சார நிதி சட்டமூலத்தின் இரண்டாவது வாக்கெடுப்பின் மீது உரை நிகழ்த்திய திருக்கோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு இரா சம்பந்தன் அவர்கள் — மேலே உள்ள கருத்தை தன்னுடைய தமிழில் இன்னும் தெளிவாக வலியுறுத்தி ஆட்சியாளரை எச்சரிக்கை செய்தார். அவர் சொன்னார்:

''புதைபொருள் ஆராய்ச்சி என்று கூறிக்கொண்டு திருகோணமலையிலும் குறிப்பாக சில இந்துப் பிரதேசங்களிலும் விருப்பத்தகாத நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடியன என்பதை அரசாங்கம் உணர வேண்டும்!

திருகோணமலையில் தனிப்பட்ட காணிகளிலும் —இந்துக் கோயில்களிலும் புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

தனிப்பட்டவர்கள் காணிகளிலும்- இந்துக்கோயில்களிலும் புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்காவிட்டால் படைகளைக் கொண்டு அந்த வேலைகளை மேற்கொள்வோம் என்று சிலர் அந்தப்பகுதியில் உள்ளவர்களிடம் கூறியிருக்கிறார்கள்.

கோணேஸ்வரத்தில் உள்ள பாபநாசம் தீர்த்தக் கிணற்றின் தூய நீரைப் பாதுகாத்து வைப்பதற்காகச் செய்யப்பட்ட அமைப்பு ஒன்று இருந்தது அது தீர்த்தக்கிணறு. ஒருசில பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சென்று— அந்த அமைப்பை உடைத்து தூய தீர்த்த நீரை அசுத்தப் படுத்தியிருக்கின்றனர். அதன் பிறகு அந்த அமைப்பு செய்யப்பட்டு—கிணறு திரும்பவும் அமைக்கப்பட்டதும்— அவர்கள் திரும்பவும் வந்து அசனே உடைத்து நொறுக்கி நாசம் செய்திருக்கிறார்கள்.

''இப்படியான வெறியாட்டங்களால் நாட்டில் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு இந்த அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்!'' என்று அவர் கூறினார்.



தமிழீழம் வருகை தந்த தமிழ்நாடு அவைத் தலைவரும் அ. தி. மு. க. பிரமுகருமான திரு. ராஜாராம் அவர்கள் குருநகரில் அண்ணு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தமிழர் தலைவர் அமிர் அவர்களும் — கூட்டணி பிரமுகர்களும் இலங்கைஅண்ணுதி. மு. க. ஆதரவாளர்களும் இந் நிகழ்ச்சியில் பெருந்திரளாகக் கலந்துகொண்டார்கள்.

## புதுவையிலிருந்து ஒரு பொன்னுன கடிதம்!

அன்புள்ள 'உதய சூரியன்' ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் பல

தங்களின் உதயசூரியன் இதழ்கள் கண்டேன். மிகத் தெளிவான கட்டுரைகள்— பேச்சுக்கள் இடம் பெற்றுச் சிறப்பாக உள்ளன

தமிழனுக்கென்று ஒருநாடு வேண்டுமென்பதில் ஈழத்தமிழர்களின் சலியாத உழைப்பிற்கும் புதுவை மாநிலம் தன்னுடைய பங்கினைத் தொடர்ந்து நல்கி வருகின்றது.

'உதயசூரியன்' தன் ஒளிக் கதிர்களால் உலகுக்கு வெளிச்சம் தருவதை உலகம் எப்படி விரும்பி வரவேற்கிறதோ— அதுபோன்று உலகெங்கும் பரவிக்கிடக்கின்ற தமிழனுக்கு உதயசூரியன் இதழ்மூலம் தமிழீழம் பெற்றுத்தர விருப்பமும் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு— தமிழ்நாட்டின் பக்கத்து மாநிலமான புதுவையிலிருந்து தமிழ் ஈழத் தோழமைக்கழகத்தின் தலைவர் திரு மு. வேந்தன் அவர்கள்கடிதம் வரைந்துள்ளார்.

## ஐயோ தமிழா!

'' சென்னையில் சேத்துப்பட்டில் உள்ள தமிழ்நாடு நிர்வாக அலுவலக முன்றலில் — இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு குடிபெயர்ந்த மலைநாட்டுத் தமிழர்களில் 57 குடும்பங்கள் — எலும்பும் தோலுமாக உட்கார்ந்திருந்தார்கள்.

இங்கிருந்து நேரே ஆந்திராவுக்கு அனுப்பப்பட்ட அம்மக்கள் — ஆறு மாதங்கள் அங்கு தாங்கமுடியாத துன்பங்களை அனுபவித்துவிட்டு — பசியால் மெலிந்து தோலாகிப்போன குழந்தைகளோடு தமிழ்நாட்டுத் தெருக்களில் அலைகிறார்கள் ! ''

தகவல்:- இந்து பத்திரிகை
(அக்டோபர் 29)

## அமிர் கொடுத்த அடி!

அமைச்சர் இராசதுரை :- இராமகிருஷ்ண மிஷன் தலைவர் முன்னிலையில் வைத்தே — எங்கள் தலைவர் ஜே. ஆர்., அரசு சுவீகரித்த கதிர்காமம் இராமகிருஷ்ண மிஷன் மடத்திற்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்.

தலைவர் அமிர்;- ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகுதான் வாக்குறுதி வந்திருக்கிறது. வாக்குறுதி நிறைவேற எத்தனை ஆண்டுகள் ஆகுமோ ?

அமைச்சர் இராசதுரை :- நீங்கள்தான் அடிக்கடி எங்கள் தலைவர் ஜே. ஆர்.ஜெயவர்த்தன அவர்களைச் சந்திக்கிறீர்களே — அவர்களிடம் பேசலாமே !

தலைவர் அமிர் :- நாங்கள் ஜே. ஆர் அவர்களோடு மந்திரி பதவிபற்றிப் பேசுவதில்லை ! ''

(பாராளுமன்றத்தில் நடந்தது )

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

## பறவைகளே! பறவைகளே!



பறவைகளே! பறவைகளே!

ஒரு தளபதி போரின் இடைநடுவில் தன் வீரர்களோடு ஓரிடத்தில் முகாமிட்டிருக்கிறன்.

ஆயிரம் வீரர்கள் குருவிக்கூடுகள் போல் ஆங்காங்கே கூடாரம் விரித்திருக்கிறர்கள்.

இந்த மண் அவனுடையது— ஆனுலும் முழுமையாக இன்னும் இது அவனுடைய சொந்தமண் ஆகவில்லை.

பகைவர்கள் நுழைந்து அவனுடைய மண்ணில்— சில பகுதிகளில் பலாத்காரமாய்க் குடியிருக்கிறர்கள்.

தளபதி தன் வீரர்களைப் பார்த்துச் சொல்லுகிறன்,—

''இனிய வீரர்களே!

முழுதாக நம் மண்ணை விடுதலைசெய்கிறவரை – இடைக் காலத்தில்— பழுதாக நம் மண்ணை நாம்விடநியாயம்இல்லை,

'கடைசி யுத்தத்தில்' முழுநிலத்தையும் மீட்டெடுப்போம் என்று காத்திருப்போமானுல் நம் மண்ணின் கடைசி அங்குலத்தையும் நாம் இழந்து போவோம்.

கிணற்றில் வீழ்ந்தவனை மீட்கிறவரை— கயிற்றைப் போட்டாவது சாகாமல் அவனைக் காக்கிறவனே கெட்டிக்காரன்.

நிலத்தை அந்நியன் குடியிருப்பால் இழந்தபின்பு எங்கே போய் நிற்கப் போகிறேம்?

வானகத்தில் கூடாரங்களை அமைத்து பூமியில்போராட இயலாது.

படைபலத்தை உறுதியாக்கும் வேலை நமக்கு இருக்கிறது—அதே நேரம் தாய் நிலத்தைப் பாதுகாக்கும் வேலை நமக்கு இருக்கிறது.

இனிய வீரர்களே!

உங்களை ஒன்று கேட்கிறேன்— அந்நியன் நுழையாது ஊர்களை நிறையுங்கள்.

இந்தச் சிறிய பாசறையில்—ஏதோ சிறிய அதிகாரம் இருக்கிறது—சிறிய அளவிலாவது பயன்படுத்துவோம்]

மக்களிடம் வரி கொள்ளுங்கள்; அதைக் கொண்டு— மண்ணுக்கு வந்த சிக்கலினைச் சரி செய்யுங்கள்!

காட்டுப் புறங்களைக் கழனிகள் ஆக்குவோம்— இல்லையென்றல் பகைவர்கள் அங்கே உழவர்கள் ஆவார்கள்— நெய்தல் நிலங்களைப் படகுகள் ஆக்குவோம்— இல்லையென்றல் பகைவர்கள் அங்கே மீனவர் ஆவார்கள்.

தொழிற்சாலைகளைக் கட்டி உங்கள் மக்களை நிரப்புங்கள்— பகைவர்கள் அவற்றைச் சுற்றித்தான் குடி இருப்புக்களைத் தொடங்குகிறர்கள்.

இனிய வீரர்களே:

திரும்பவும் சொல்கிறேன்—முழு நாட்டின் அதிகாரமும் உங்கள்கையிலே இல்லாவிட்டாலும்—இந்த முகாமின் சிறிய அதிகாரங்கள் உங்கள் கையில்தான் இருக்கின்றன—

பயன்படுத்துங்கள்.

மண்ணை மீட்பது நம் கடமை— ஆனல் அதுவரை அழியாமல் மண்ணைக் காப்பது நம்கடமை!''

பறவைகளே! பறவைகளே!

தளபதி ஒருவன் பாசறை உட்புறம் பேச்சை முடிக்கிறன். தறுதலை ஒருவன் பாதை வெளிப்புறம் பேச்சை எடுக்கிறன்:—

''பார்த்தீர்களா பார்த்தீர்களா— நம் விடுதலைப் பயணம் பாழானது—பார்த்தீர்களா பார்த்தீர்களா?

வாள் ஆண்மை—விடுதலை என்று நாம் இருந்தோம்— தளபதியோ வேளாண்மை மீன்வலை என்று வாயளக்கிறன்.

தொழிற்சாலை சுதந்திரம் ஆகுமா? தோழரே! தொழிற்சாலை சுதந்திரம் ஆகுமா?

அபிவிருத்தியைத் தூக்கி எறி! விடுதலையே எங்கள் குறி!

பாதையிலே இப்பாவி போதையிலே புலம்புகிறன்.

பறவைகளே! பறவைகளே!

இரண்டு காட்சிகளில் என்ன காண்கிறீர்கள்?

பெரும் அறிவுள்ள தளபதியையும் பார்த்தீர்கள்— வெறும் வெறியுள்ள தறுதலையையும் பார்த்தீர்கள்:

அபிவிருத்தியா? சுதந்திரமா? என்று நம்மைப்பார்த்துக் கேட்பவர்களுக்கு தளபதியின் வார்த்தைகள் அர்த்தமுள்ள வேதமாகும்.

சுதந்திரம்தான் அபிவிருத்தியை விடப்பெரிது— ஆனல் சுதந்திரத்துக்கான அபிவிருத்தி சுதந்திரத்தைவிட பெரிது

பாலம் போட்டால்தான் படை சென்று பகைவனை அடக்கமுடியும் என்றல் பாலத்தைப் போடுங்கள்— அந்தப்பாலம் இல்லாவிட்டால் சுதந்திரம் பழுக்காது என்கிறன் அனுபவசாலி. சுதந்திரத்தைப் படைக்கும் பாலம் சுதந்திரத்தைவிடப் பெரிய பாலமாகும்

பறவைகளே! பறவைகளே!

தமிழ் ஈழ மண்ணில் விவசாயம்— மீன்பிடி தொழிற்சாலை—இவற்றைச்சுற்றி நிகழும் சிங்களக்குடியேற்றத்தைத் தடுத்து—தமிழரை அங்கு குடியமர்த்திட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அபிவிருத்தி சபைக்கு தலையசைத்திருக்கிறர்கள்.

பறவைகளே! பறவைகளே!

ஒன்றை மட்டும் இந்த நேரம் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்— அபிவிருத்தி ஒருபுறம் இருந்தாலும்— தளபதி பாசறையில்தான் இருக்கிறன் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்,

நாமெல்லாம் அவன் பக்கமே!

கடைசி யுத்தம் நிகழ்கின்றவரை—இந்த மண்ணில் அடிமைத்தனத்தின் கடைசி மூச்சு நிற்கின்றவரை களத்திலேயே நிற்போம்.

கதைஞர்
காசி ஆனந்தன்

# வடக்கே வரும் அமைச்சர்களின் வாயாடித்தனம்!

## காவலூர் எம். பி. கண்டனம்!

வடக்கே வரும் சிறிலங்கா நாட்டின் அமைச்சர்கள் கிளிப்பிள்ளை போல் ஒரே ஒரு விசயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறர்கள். அதாவது தமிழ் மக்களின் நன்மைக்காகத்தமிழர் விடுதலைக்கூட்டணிப்பா.உக்கள் எதுவும் அரசாங்கத்திடம் கேட்பதில்லையென்று அவர்கள் கூறி மக்களைத் திசை திருப்ப முயல்கிறர்கள் இதனை காவலூர் பா உ திரு.கா. பொ.இரத்தினம் அண்மையில் பாராளுமன்றத்தில் கண்டித்துப் பேசினர். பேச்சுவருமாறு:—

எனது தொகுதி கடலாற் சூழப்பட்ட பல தீவுகளைக் கொண்டது அங்கு பெரும் பகுதியான மக்கள்கடற்றெழிலில் ஈடுபட்டிருக்கிறர்கள்.வட பகுதிக்கு வருகிற அமைச்சர்கள், வட பகுதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை எதுவுமே கேட்பதில்லை என்று சொல்வது வழக்கம். ஒரு அமைச்சர் அங்கே வந்த பொழுது பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானல் கொழும்பில் வந்து தங்களைக் கேட்கலாம் என்று நகைச்சுவையாகப் பேசினர். நாங்கள் கேட்காமல் இருக்கவில்லை.

### சீநோர் புறக்கணிப்பு

சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் தேதி வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது இலங்கையிலுள்ள கடற்றெழிற் பகுதிகளை வட பகுதி, தென்மேல் பகுதி தென்பகுதி கிழக்குப் பகுதி என நான்காகப் பிரித்துவட பகுதியைத் தவிர்ந்த ஏனைய மூன்று பகுதிகளுக்கும் பிற நாட்டு உதவியுடன் பல திட்டங்களை வகுத்திருக்கிறர்கள், ஏன் வட பகுதிக்கும் பிற நாட்டு உதவியைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்றும் அவ்விதம் பிறநாட்டு உதவி இனி மேலாவது பெற்றுக் கொடுக்கப்படுமா என்றும் என்னென்ன திட்டங்கள் வகுக்கப்படவிருக்கின்றன என்றும் நான் கேட்டேன்.


வடபகுதியிலே 'சீநோர்' நிறுவனம் இருக்கிறது என்று அமைச்சர் உடனே பதில் சொன்னர்வட பகுதியிலுள்ள 'சீநோர்' நிறுவனம் வட பகுதிக் கடற்றெழிலாளர்களுடைய வாய்ப்புக்களையும் வசதிகளையும் செய்து கொடுக்கவிருக்கிறது என்றும் சொன்னர். நான் இடைமறித்து அந்த 'சீநோர்' நிறுவனம் மூடப்படப் போகிறது என்றும் அது அதனுடைய பணிகளைச் சுருக்கிக்கொண்டு வெளி இடங்களுக்கு அதாவது இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு கிழக்குக்கும் தெற்குக்கும்— செல்லவிருக்கிறது என்றும் சொன்னேன் அமைச்சரோ இல்லை என்று சொன்னர் சொன்னது மட்டுமல்லாமல், தன்னுடைய செயலாளர்தான் சீநோர் நிறுவனத்துக்கும் தலைவராக இருக்கிறர் என்றும் சொன்னர்.

நான் யாழ்ப்பாணம் சென்றவுடன் எனக்கு அமைச்சர் 15.12.79 ஆம் தேதி இப்படிக் கூறினர் என்றும் எனவே, வட பகுதியிலுள்ள மீனவர்களின் குறைகளைத்தீர்ப்பதற்கு இந்த இந்தத் திட்டங்களைச் செய்து தர வேண்டும் என்றும் சீநோர் நிறுவனத்துக்கு எழுதினேன். அதன்பிரதியொன்றை அமைச்சருக்கும் அனுப்பினேன்.

'சீநோர்' நிறுவனம் இதுவரையும் எந்தவிதமான மறுமொழியையும் தரவில்லை- அதன் பின் அமைச்சர் கூறியபடி அவருடைய செயலாளருக்கு— சீனோர் நிறுவனத்தின் தலைவருக்கு—கடிதம் எழுதி அவற்றுக்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டேன். அவரும் இதுவரை எந்தவிதமான மறுமொழியும் தரவில்லை.

### திசை திருப்ப வேண்டாம்

எனவே, வட பகுதிக்கு. ஏனைய மூன்று பகுதிகளுக்கும் கொடுக்கப்பட்ட உதவிபோல பிறநாட்டு உதவியோ அல்லது வேறு பண உதவியோ கொடுத்து, நான் சீனோர் நிறுவனத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கடற்றெழில் அமைச்சர் அவர்கள் அதிகமாக வடக்கே வருகிறஅமைச்சர் ஆவார் வந்தவுடன் ஒன்றும் கேட்கிறர்கள் இல்லை என்று சொல்வது வழக்கம். இப்படியாக அவர் மட்டுமல்ல, ஏனைய அமைச்சர்களும் சொல்லிமக்களைத்திசை திருப்புவதை விடுத்து நாங்கள் கேட்பதைச் செய்ய வேண்டும்.



## இலட்சிய இதயங்களோடு..

# மார்க்ஸீயத்தில் நான் மனம் தோய்ந்தவன்!

அநீதி கண்டு பொங்கும் உள்ளம் இளைஞர்களது. உறுதி கொண்ட நெஞ்சோடு, முறுக்கேறிய உடலோடு, துடித்துச் செயலாற்றும் தன்மை வாலிபசமுதாயத்திற்கே உரியது. தமிழ்ச் சமுதாயம் காலங்காலமாக ஊறிவிட்ட எத்தனையோ அநீதிகளைத்தன்னகத்தே சுமந்து நிற்கிறது. சுதந்திரப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமாயின் சமூக அநீதி என்ற சுமைதூக்கி வீசப்பட வேண்டும்.

அடிமைப்பட்ட ஆபிரிக்க சமூகங்களில் பிரபுத்துவமுறை உண்டு. பொருளாதார ஏற்றத்தாழ்வுஉண்டு. மூடப்பழக்க வழக்கங்கள் உண்டு, ஆனால் இத்தனைக்கும் மேலாகப் பிறப்பினால் உயர்வுதாழ்வு பேசுகின்ற—தொட்டால் தீட்டென்று கூறுகின்ற—ஆண்டவன் சந்நிதியிலும் எட்டநில்லென்று தள்ளிவைக்கின்ற கொடுமை இந்தியாவிலும் இலங்கையிலும்தான் உண்டு, நிறத்திமிர் வேற்றினத்தவனை ஒதுக்கிவைக்கின்றது. ஆனால் தீண்டாமை தன்னினத்தவனையே தாழ்த்திஒதுக்குகின்றது. உலகெலாம் பரந்து வாழுகின்ற தமிழினம் அடையும் சிறுமை அத்தனைக்கும் மூலகாரணம் தீண்டாமைக் கொள்கையினால் எம்மினத்தில் ஒரு பகுதியினருக்கு நாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இழைக்கும்கொடுமையின் மொத்த விளைவே என்பது எனது திடமான நம்பிக்கை-தந்தை செல்வாவின் தலைமையில் கடந்த முப்பது ஆண்டுகளாக இந்தக் கொடுமையின் கோரத்தைச்சற்றுக் குறைத்திருக்கிறோம். ஆனால் அதை முற்றாகக் களையவேண்டியது— சாதிப்பிரிவினையின் வேரையும் கில்லி எறிய வேண்டியது இளைஞர் சமுதாயத்தின் கடமையாகும்.

சுக்கட்சியின் அடிப்படைக் கொள்கையாகஏற்றுக்கொள்ளப் படுவதற்கு இளைஞராகிய நாமே வாதாடி ஒரு வாக்கால் வெற்றிபெற்றோம். 1953ம் ஆண்டு யூ.என் பி.அரசாங்கம் பங்கீட்டரிசியின் விலையைக் கூட்டி ஏழை மக்களின் வயிற்றிலடித்த போது நாட்டிலுள்ள முற்போக்கு சக்திகள் திரண்டெழுந்தன இலங்கை முழுவதும் நடைபெற்ற ஹர்த்தால் வடகிழக்கு மாகாணங்களில் வெற்றி பெற்றமைக்குக் காரணம் தமிழரசுக்கட்சியே என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பொது செயலாளராக இருந்த திரு லெஸ்லி குணவர்த்தன குறிப்பிட்டிருக்கிறார், தமிழரசு வாலிபமுன்னணியில் அங்கிருந்த இளைஞர்களே யூ.என்,பீ. ஆட்சிக்கெதிரான ஹர்த்தாலை எமபிரதேசத்தில் முன்னின்று நடத்தினர்.

1954ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த யூ என். பி பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தி பொலீசாரின் குண்டாந்தடித் தாக்குதலினால் இரத்தம் சிந்தியோரும் எமது வாலிப முன்னணியினரே அன்று என் உடைமுழுவதும் இரத்தம் தோய்ந்த நிலையில் நகரமண்டப மைதானத்தை விட்டு வெளியே வந்த கோலத்தை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் யூ. என்.பி, ஆட்சி வரும்போது எதிர்ப்பதில்லை என்று விதண்டாவாதம் பேசுவோர் வரலாறு அறியாதவர்களே இளைஞர் உள்ளங்களை எம்மிடமிருந்து பிரிப்பதற்குச் செய்யப்படும் திட்டமிட்ட சூழ்ச்சியின் ஓர் அங்கமே இத்தகைய பிரசாரம்.

1977ம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் கொள்கை விளக்க அறிக்கையில் விஞ்ஞான ரீதியான சோஷலிசமே எம்கொள்கை என்பதை எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி எடுத்துக்கூறினோம். சென்ற மூன்று ஆண்டுகளாக யூ. என்.பி. அரசாங்கம் கொண்டுவந்த சோஷலிச விரோத—தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள் சட்டங்கள் எல்லாவற்றையும் உறுதியாக நாம் எதிர்த்தே வந்திருக்கின்றோம். சர்வதேச ரீதியாக சோஷலிச அணிக்கு ஆதரவான இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் மத்தியகிழக்கில் அராபிய இன உணர்வுக்கும் ஆதரவான இயக்கம் என்பதை அராபிய உலகம் அங்கீகரித்திருக்கிறது இத்தனைக்கும் மத்தியில் எமமைப் பிற்போக்கு வாதிகள் என்று வர்ணித்துப் பிரசாரம் செய்யும் சில தம்பிமாரின உண்மை நோக்கத்தை இலட்சிய இதயங்கள் புரிந்துகொள்ள வேண்டாமா?

சமீபத்தில் மாவட்ட அபிவிருத்திசபைகள் விடயமாக இளம் உள்ளங்களைத் திசை திருப்பி விடமேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சென்றவாரம் எடுத்துக்காட்டினேன் அதன் ஆரம்ப நடவடிக்கைகளில் ஒன்றாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வரங்கு நடத்தப்பட்டது சட்டமூலம் தயாரிக்கப்படுவதற்கு முன்பே அதை ஆராயும்விசித்திரமானமுயற்சிமேற்கொள்ளப்பட்டது. நீண்டகாலஇடதுசாரி இயக்கஏடான 'ரிறிபியூன்' இதழ் இது இடதுசாரிகளால் மேற்கொள்ளப்பட்டதென்று தனது கட்டுரையில் கூறுகின்றது. பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல அவர்களின் உண்மை நிலையை அப்பத்திரிகை அறிந்திருப்பது ஆச்சரியமல்ல. அந்த ஆய்வரங்கில் ஆராயப்பட்டது நீதியரசர் விக்டர் தென்னக்கோன் தலைமையிலான எண்மரின் அறிக்கையே என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்டதே. அப்படியாயின் அந்த ஆய்வரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகளை பிரசுரிக்கும்போது மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி ஆணைக்குழுவின் அறிக்கையும் தமிழ் பேசும் மக்களும் என்ற தலைப்பில் பிரசுரித்திருந்ததால்அதற்குப் பொறுப்பானவர்களின் நடுவு நிலையை நாம் சந்தேகிக்கத் தேவையில்லை. ஆனால் மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் தமிழ்ப்பேசும் மக்களும் என்ற தலைப்பில் பிரசுரித்தது திட்டமிட்டுச் செய்யப்பட்ட பொய்ப்பிரசாரம் என்று சந்தேகம் எழஇடமளித்துவிட்டது இதை நான் அதற்குப் பொறுப்பானபேராசிரியர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

இந்த ஆய்வரங்கில் தெரிவிக்கப்பட்ட அரைவேக்காட்டு கருத்துக்கள் சிலவற்றின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திலும் வெளியிலும்இருக்கும் இளம் இதயங்கள் பல தவறாக வழி நடத்தப்பட்டுவிட்டன, உணர்ச்சி கொண்டு பொங்கிஎழுவது இளைஞர்களுக்கு இயல்பானது நாம் விளக்கம் அளிப்பது எம்மீது பழியைச் சுமத்துவதற்கு வழி வகுக்கும் என்ற காரணத்தினால் நாம் பதில் கூறாதிருந்த சூழ்நிலையைப் பயன்படுத்திபலபொய்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்பட்டன இந்தப் பணியில் ஈடுபட்டவர்கள் இரண்டொருவரைத் தவிர ஆரம்பத்திலிருந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்தவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில் அந்த அரசுக்கு முண்டுகொடுத்து வந்த சிலர் திடீரென்று தமிழ்ஈழத் தீவிரவாதிகளாக மாறி எம்மைத்திட்டுகின்றனர், 1972ம் ஆண்டு முதல் எம்மைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டு தேர்தலில் எம்மை எதிர்த்துப் போட்டியிட்ட சுயாட்சிக் கழகத்தினர் திட்டுகின்றனர், ஈழவிடுதலை இயக்கத்திலிருந்து பிரிந்த சிலர் திட்டுகின்றனர், அபிவிருத்திபற்றிய பிரச்சினை எழு முன்பே இளைஞர் பேரவையிலிருந்து பிரிந்த சிலர் திட்டுகின்றனர். இவர்கள் எல்லோரிடையிலும் எம்மைத்திட்டுவதில் ஒற்றுமைஉண்டேதவிர ஆக்கபூர்வமாக இனத்தை விடுதலைப் பாதையில் அழைத்துச் செல்லும் ஆற்றலுண்டா? சுதந்திரத் துறைமுகத்தைச் சென்றடைய மறைந்த தலைவர்கள் கட்டிக் கையளித்த கூட்டணிக் கப்பலை உடைக்க முயற்சிக்கின்றனர். மாற்றுக் கப்பலுண்டோ என்றால் சிந்திக்கும் திறன்படைத்தோரெல்லாம் இல்லை என்றே கூறுவர். பல்கலைக் கழகத்தில் பயிலும் தம்பிமார் பலரின் உள்ளம் எங்களோடு இருப்பதை நான் அறிவேன். ஒருபோதும் எம்மோடு இருக்காத சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்களை எங்களிடமிருந்து பிரிக்க இடமளியாதீர்கள். விடுதலைப் பாதையில் உங்களைப் போலப் பல்கலைக்கழக மாணவனாக — இருபது வயது இளைஞனாக — இருந்தபோதே நடக்கத்தொடங்கியவன் நான். நீதிமன்றம், குண்டாந்தடி, தாக்குதல், திட்டுகள் எல்லாவற்றையும் தாங்கிச் சென்றுகொண்டிருப்பவன் என்ற முறையில் உங்களை உரிமையோடு அழைக்கிறேன். உங்கள் மனதில் சந்தேகங்கள் எழுந்தால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள். உங்கள் கருத்தைக் கூறுங்கள், எங்கள் உள்ளத்தைப் புரிந்து கொள்ளுங்கள்: இலட்சிய உள்ளங்களை இலட்சியத்திலிருந்து, அதை அடைய உழைக்கும் இயக்கத்திலிருந்து யாரும் பிரிக்கமுடியாதென்பதைக் காட்டுங்கள்.

பொருளாதார அநீதியும், ஏழ்மையின்கொடுமையும் வர்க்கச் சுரண்டலும் இளம் உள்ளங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தை நான் நன்குஅறிவேன். பல்கலைக்கழக மாணவனாக இருக்கும் போதே மார்க்சீய சிந்தனையால் பெரிதும் கவரப்பட்டேன். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் சிறைச்சாலையிலிருந்து 19 5ம் ஆண்டு விடுதலை பெற்று வெளிவந்த டாக்டர்என்.எம் பெரேரா சிறிது காலம் எனது அரசியல் நூல் விரிவுரையாளராக இருந்தார் வேறுசில நண்பர்களோடு அவருடைய வீடுசென்று கார்ல்மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ட்ராற்ஸ்கி ஆகியோரின் தத்துவங்களைக்கற்றேன். உலகப்புரட்சிச் சித்தாந்தம் பேசினாலும் பாராளுமன்ற வழியில் அவர் கொண்டிருந்த நாட்டத்தை நான் அப்போதே கவனிக்சக் கூடியதாக இருந்தது புரட்சியின் தந்தை என்று அழைக்கப்பட்ட திரு, பிலிப் குணவாத்தனா வீட்டிற்கும் சென்று அவரிடமும் மார்கசீய பாடங் கேட்டேன். ஆனால் 1947ல் சிங்களக் கொடியை ஏற்க வேண்டுமென்று அவர்வாதாடியபோது சிங்களத் தலைவர்கள் பலரின் மார்க்சீய சித்தாந்தத்தையும் மேலாடி நின்ற சிங்கள இனப்பற்றையும் கண்டேன். 10 ஆண்டுகளின் பின் இந்த இனப்பற்று மார்ச்சீய போர்வையையும் கிழித்துக் கொண்டு, மொழிவெறி என்ற பூதாகாரமான உருவோடு 1956ல் வெளிவந்ததையும். 1958ல் இனவெறியாகத் தமிழ் இன சங்காரத்தில்இறங்கியதையும் கண்டோம்-

சமதர்மத் தலைவர்கள் தகிடுதத்தம் செய்தாலும் சமதர்ம சித்தாந்தத்தின் இன்றியமையாமையை அன்றே என் உள்ளத்தில் ஆழமாகப்பதித்துக்கொண்டேன் 1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஆரம்ப மகாநாட்டில் சாதி சமயம், இனம், ஆண்—பெண் என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாத சோஷலிச பொருளாதார அமைப்பினை ஏற்படுத்தல் என்பது தமிழர

## அண்ணன் அமிர்

## சிறிலங்காப் பிரதமர் சிரிக்க வைக்கின்றூர்!

சில வாரங்களுக்கு முன்பு அமெரிக்கா சென்றிருந்த சிறிலங்கா நாட்டுப் பிரதமர் சிறீமான் பிரேமதாசா அவர்கள் - அங்கு (நீயூயோர்க்கில்) வாழும் ஆசிய மக்களிடையே உரையாற்றும் போதுஓர் 'அரும் பெருங்கருத்தை' அவிழ்த்து விட்டிருந்தார்.

அந்தக் கருத்து —

தமிழீழக் கொள்கை தாஞகவே மறைந்துவிட்டது.

பிரதம அமைச்சரின் பேச்சைக் கேட்டதுதான் தாமசம் இங்குள்ள அபிவிருத்திச் சபை எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளத் துவங்கிவிட்டார்கள் — பார்த்தீர்களா — பிரேமதாசாவின் பேச்சை ? தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக்கு இதனை மறுக்கும் தைரியம் உண்டா? என்று சவாலும் விடுத்தனர்.

சவால் விட்டவர்களுக்குச் சரியான பதில் தந்தார் தமிழர் தலைவர் அமிர் அவர்கள் !

சிறிலங்காப் பிரதமரின் பேச்சை நாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணைதந்தவர்கள் தமிழ்ப் பேசும் மக்களே — இதனை மாற்றியமைக்க எவராலும் முடியாது.

தமிழீழ இலட்சிய வெற்றிக்காக தளராது போராடுவோம்.

பதிலைக் கேட்ட பரபரப்புக்காரர்கள் — பெட்டிப் பாம்பாகவே அடங்கிவிட்டனர்.

நமக்குத் தெரியும் !

பிரதமர் மட்டுமல்ல-அவரது பெருந்தலைவர் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்தியா சென்ற போது என்ன பேசினூரென்று !

பிறநாடுகள் செல்லும் போதெல்லாம்-தமிழர்களுக்குப் பிரச்சனையே இல்லையென்று பிரச்சாரம் செய்வதும் - பின் திரும்பி வந்ததும் தமிழர்களுக்கும் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கின்றன என்று தமக்கே உரியபாணியில் தலை சொறிவதும் அவர்களுக்குக் கைவந்த கலை

கலையைக் கண்டுணர முடியாத அபிவிருத்திச்சபை எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆ......ஊ...... என்று அனுவசியமாகக் குதிக்கின்றூர்கள்.

துரும்பைத் தூணகக் காட்டி உங்களைத் துவம்சம் செய்வோம் எனத்துந்துபி முழக்குகின்றூர்கள் - விடுதலைக் கூட்டணியின் வீரத்தலைமையைப் பார்த்து !

தற்போது - தமிழ் நிலம் மன்னருக்குச் சென்றிருந்த தலைமை அமைச்சர் பிரேமதாசா அவர்கள் பொதுக்கூட்டமொன்றில் பேசும் போது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனி நாடு அமைக்கும் முயற்சியைத் தள்ளிவிட்டு - கிராம ராஜ்ஜியம் உருவாக்க ஒத்துழைக்க வேண்மெனக் குரல் கொடுத்திருக்கின்றூர்.

நமக்கு இந்தப் பேச்சைக் கேட்கையில் நாடாளும் தலைமை அமைச்சர் நல்ல நகைச்சுவையாளர் என்றே எண்ணத் தோன்றுகின்றது !

இல்லையேல்.

அமெரிக்காவில் - தமிழீழக்கோரிக்கை அஸ்தமித்துவிட்டதெனப் பேசியவர் -

சிறிலங்கா திரும்பியதும் தனிநாடு அமைப்பதை விடுத்து - தமிழர்கள் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு வாழ முன் வரவேண்டுமென அழைப்பு விடுப்பாரா?

இல்லையென்று மறுத்த ஒன்றை— இருக்கின்றதுஎனமறுகணமே ஒப்புக் கொள்ளும் பிரதமர் 'துக்ளக்' மாதிரி நம்மையெல்லாம் சிரிக்க வைக்கின்றூரா, என்ன?

இது போதாதென்று

கொண்ட கொள்கைக்குக் கொள்ளி வையுங்கள் என்று கோரிக்கையும் விடுகின்றூர் ! அதாவது

கன்னிக்குக் கற்பு எதற்கு ? கருநிறக் கூந்தல் கமகமக்க மல்லிகைப்பூச் சூடியிருந்தால் போதாதா என்று கேட்பது போல !

வேடிக்கையான மனிதர்தான் - நாம் விழுந்து விழுந்து சிரிக்க வேண்டு மென்று விரும்புகிறூரோ ?

அதுவும் ஒருவகையில் நல்லதுதான் !

அதிகம் சிரித்தால் ஆயுட் காலம் கூடுமாம் !
அதனுல் -

வயிறு குலுங்கச் சிரித்துக் கொண்டே வாழ்க பிரதமர் என வாழ்த்துவோம் !

ஆமாம் — தென்னிலங்கையில் ஒரு தென்னலிராமன் இருக்கத்தான் செய்கின்றூர் !

### ஆசிரியர் பேசுகிறார்

## வவுனியாப் பொதுச்சபையில்

# கவிஞர் பேசியது என்ன?

### - - மாவை சொல்கிறூர்

வவுனியாவில் நடைபெற்று முடிந்த த. வி. கூட்டணிப் பொதுச் சபையில் கவிஞர் காசி ஆனந்தன் சுதந்திரத்தை விடச் சோறு பெரிதென்று பேசினூரா?

அவ்வாறு அவர் பேசியாருப்பார் என்று நினைக்கவே மனம் கூசுகிறது.

நாங்களும் பொதுச்சபையிலிருந்து கவிஞரின் பேச்சைக் கேட்டோம்.

சோறு சுதந்திரமா என்று ஒப்பிட்டுச் சோறு பெரிதென்று யாருமே அப்படிப் பேசவில்லை.

இப்படிக் கேட்டால் சுதந்திரந்தான் வேண்டும் என்று சொல்லுகிறேன் என்று கவிஞர் பேசினூர்—உண்மை.

அப்படியிருக்கச் சுதந்திரன் ஆசிரியர் இறங்கிப்போய் எழுத ஆரம்பித்திருப்பது மிகுந்த வேதனைக்குரியது.

மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பில் உள்ள குடியேற்ற அதிகாரம் பற்றியே கவிஞர் பேசினூர்கள்.

''தமிழீழத்தின் சுதந்திரப் போராட்டம் போர் என்கிற கட்டத்தினை அடைவதற்கு முன் எல்லைப் புறங்களில் இன்னும் இழந்துவிடாமல் இருக்கின்ற மண்ணைக் காக்க முடியுமா என்று சிந்திக்கிறூம்.

தமிழீழத்தின் எல்லைப் புறங்களிலே தமிழ் மக்களைக் குடியேற்ற இந்த மாவட்ட அபிவிருத்திச்சபை உதவுமென்று நினைக்கின்றூம். இந்த நோக்கில் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்பதில் தவறு? என்று கேட்டார்.

கவிஞரின் முழுப்பேச்சையும் முழுநோக்கத்தையும் புரிந்து கொள்ளாமல் விடுதலைப்போராட்டத்தில் இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கூடச்சிந்திக்காமல்சில



சொற்களைத் தேடிப் பிடித்துத் திரித்துச்செய்தியாக்கி அதையேமையக்கருவாக்கி விமர்சிப்பது விடுதலைக்கு எப்படி உதவமுடியும்!

இனிய நண்பர் கவிஞர் என்று சுதந்திரன் ஆசிரியர் குறிப்பிட்டால்' 'உனது நண்பனைக்கொண்டு உன்னை அறிந்துகொள்ளலாம்'' என்று சொல்வார்களே, அதன் பொருள் என்ன:

''யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்பதுதான் எதிரி கூடக் கடைப்பிடிக்கும் கருத்தாகும்-

எனவே ஒரே பாசறையில் வளர்ந்தவர்கள்—ஒரே இலட்சியத்திற்காக வாழ்பவர்கள் ஒரே களத்தில் மடியப்போகிறவர்கள் என்ற உள்ளத்தோடு ஏடுகளில் எழுதிடுவோம். மேடைகளில் பேசிடுவோம்.

தவறில் தொடங்கினுல் தவறில் முடியும் எனவே நல்லதைத்தொட்டுநல்லதை முடிப்போம்.

தமிழீழ இலட்சியத்திற்கே யாவற்றையும் செய்வோம்.

இவ்வாறு—தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளரும், த.வி.கூட்டணிப் பொதுச் சபை உறுப்பினர்களில்ஒருவருமான திரு. மாவைசேனதிராசா அவர்கள் உதயசூரியனுக்குத் தெரிவித்தார்.

## வாழ்த்துகிறோம்

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் இளைஞர் பேரவையின் முக்கிய உறுப்பினரும், தமிழின விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டவரும், சிறந்த பேச்சாளரும் கவிஞருமான சட்டத்தரணி கனக மனேகரன் உடல்சார் மருத்துவர் தேன்மொழி திருமணம் 23.10.80ல் வல்வையில்நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் தமிழ் முறைப்படி சிறப்புற நிகழ்ந்த இத்திருமணவிழாவில் கலந்து கொண்டு தமிழர் தலைவர் அமிர் த.வி கூட்டணித் தலைவர் சிவா கவிஞர் காசிஆனந்தன், கரிகாலன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

உதயசூரியன் ஏட்டின் சார்பில் மணமக்களை நாம் பல்லாண்டு வாழ்கவெனவாழ்த்துகிறூம்!

# தமிழ் ஈழத் தமிழர்களே!

**திரு. கி. அருளழகன் M. A. (Eng. Litt.) சென்னை இலயோலாக்கல்லூரியின் ஆங்கிலத் துணைப்பேராசிரியர். அடிநாள் தொட்டு தமிழ்மொழியுணர்வும், இன உணர்வும் வாய்க்கப்பெற்றவர். 'தமிழ் மரபு நாடகங்களின் வளர்ச்சி' என்பது குறித்தும், இதனை ஆங்கில, அமெரிக்க மேடை நாடக வளர்ச்சி வரலாற்றோடு இணைத்தும், ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். கல்லூரிக் காலங்களில் தமிழ்ப் பேரவையின் செயலராகவும், அனைத்துக்கல்லூரி தமிழ் மாணவர் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றி, தமிழுணர்வில் தோய்த்துக் கொண்டவர் இவர். தாய்த்தமிழகத்தில் இருந்து, தென்னிலங்கை நிலைமைகளை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கும் தமிழன்பர்களுள் ஒருவர் இவர். தமிழ் ஈழத்தின் தற்போதைய நிலைகண்டு தன் உணர்வுகளை வடித்துக் காட்டுகிறார்.**

"தமிழ் ஈழநாடு என்னும் இலட்சிய திசை நோக்கி நடைபயிலும் விடுதலைப் பாசறைஎங்கே?

விடுதலை உணர்வோடு வியூகம் வகுத்து நிற்கும் தமிழ்க்குடி எங்கே?

ஒன்றுபட்டு ஒரே இலக்கு நோக்கி முன்னேறும் கூட்டணிப் படை எங்கே?

அவ்வப்போது செவிவழிச் செய்தியாக வந்து எம்சிந்தனையைக் குழப்பி

உள்ளத்தை வேதனையிலாழ்த்தும் வண்ணமாக நடந்துவரும் பிரச்சினைகள்தாம் என்னே? என்னே?" என்று

தன்னைத்தானே கேட்டுக்கொண்டு உங்களைச் சந்தித்து உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள வந்த தமிழ் உள்ளம் பேசுகிறது.

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் மறவர் கூட்டம்,

உள்ளத்தாற் ஒருவரே மற்று உடலினுற் பலராய்க் காண்பர். கள்ளத்தாற் நெருங்கொணுதே எனவையம் கலங்கக் கண்டு துள்ளும் நாள்எந்நாள்' உள்ளம் துவளும் நாள் எந்நாளோ"?—என்று

எதிர்பார்ப்புக்கள் எத்தனையோ தாங்கி உங்கள் மண்ணில் காலெடுத்து வைத்து விக்கித்துப் போய், வேதனை உணர்வுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள நினைக்கின்ற, தமிழ் உள்ளம் ஒன்றின் அன்பழைப்பு இது.

"நான் நடைபழகி உலவிவந்தமண் இந்தியத்துணைகண்டத்துத் தென்தமிழ்மண். நான் கால் பதித்து வலம் வரும் மண் விடுதலையுணர்வில்எழுச்சியுறும் ஈழத்தீவின்மண் வேற்றுமண் விவகாரம் நமக்கேன்? இதுவீண்"—என்று எண்ணுவோன் நான் அல்ல,

மண்மூடிப் போகின்ற சாதாரண மனிதர்களிலே ஒருவனைப்போல ஒதுங்கிப்போக முடியவில்லை என்னுல்—

எனவேதான் கண்மூடிக்கொண்டு போகின்ற போக்கு இன்றி கண்ணீரைத்துடைத்துக்கொண்டு கேட்கிறேன்.

எந்த முகாமிலிருந்துபேசுகிறேன்என்பதல்ல.

எந்தன் தமிழரிடையே பேசுகிறேன் என்ற எண்ணமே மேலோங்கிநிற்கிறது என்னில் இப்போது,

தமிழ் உதிரத்துச் சோதரரே! உங்கள் மத்தியில் என்னதான் இப்போது.

மொழியுணர்வும் இனஉணர்வும் நிரம்பப்பெற்ற தமிழர் கூட்டம்,

அதனிடையில் விழிப்புணர்வு பெற்ற வீரர் கூட்டம்.

'நாட்டபிமானம் ஊட்டிய சினத்தீ மட்டும் இப்போது திசைமாறிப் பாய்கிறதோ?' என்பது போல் ஒருதோற்றம்.

எரியும் தீப்பிழம்பு மேலே மேலேஎன்றுமேலாதிக்கம் நோக்கியே பாய்ந்து எரிந்திட வேண்டும். அதுவன்றி பக்கவாட்டில் பலமுனையில் எரியநேர்ந்தால், சந்தர்ப்பச் சூறையில் சிக்கிஅணையப்போகிறது என்றன்றோ பொருள் கொள்வோம்.

அந்தப் பதைப்பிலேதான் உங்கள் நெஞ்சங்களைத்தொட நினைக்கிறேன்.

அடிமைத்தளையறுக்க ஈழம் வடிக்கின்ற கண்ணீர் ஈழநாடு ஒன்றே இறுதிவிடுதலை என்று உங்கள் இதயம் உருக்கும் செந்நீர். வல்லாண்மை இழைக்கின்ற கோரக்கொடுமைகள் எண்ணி உம் விழிகள் பெருக்கும் நீர்.

இவற்றோடு உங்களைச்சுற்றி ஒலிப்பது முகாரி ராகம்,

ஆனுல் போர்ப்பரணி கேட்கிறது இப்போது.

'உங்கள் புறப்பாடு எத்திசை நோக்கி?'—என்றுநோக்க, உலகளாவிய உங்கள் தமிழ்ச்சகாதரர் நாங்கள் திரும்பிப்பார்த்து திகைத்தல்லவா போகிறோம்?

சொந்த முகாமுக்குள்ளேயன்றோ பாணங்கள் பாய்ந்து கொண்டிருக்கின்றன?

'எங்கள் பகைவர் எங்கோ தொலைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டே'—என்ற புரட்சிக்கவிஞரின் கவிதைவரிகள் கனவாகவே கரைந்துவிடுமோ என்ற சோகமன்றோ எம்மைசோர்வுறவைக்கிறது?

வேங்கை வரிப்புலிகள் வேட்டுவர்கள் இல்லாத சுதந்திரக் கானகம் அமைத்திட முயல்கின்றன.

சரி! இறுதிப்பழி நம்மீது வேண்டாம் என்று உங்கள் தலைமை நினைக்கலாம்.

'மாவட்ட அபிவிருத்தி சபையைப் பயன்படுத்த முயன்று பார்ப்போமே' என்ற நினைப்பில் நேர்மை மட்டுமே நிறைந்திருக்கலாம்.

இதுவும் கூட, ஆதிக்புரியின் மேலாதிக்கம் மேலும் விரிந்து பரவுவதைதடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கவே இருக்கலாம் 'விடுதலை உணர்வு இதனுலெல்லாம் மங்கிவிடும் என்று உங்களுக்குள் ஏன் அவநம்பிக்கை?

நீங்கள் எல்லாம் இணைந்துதானே கூட்டணி?

உங்கள் உணர்வுகள் இணைந்தால் தானேகூட்டணிக்கு எழுச்சி?

இந்த நேரத்தில், நீங்கள் உங்களுக்குள் பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டியதை, மக்கள் மன்றத்தில் பத்திரிகை அரங்கில, வெட்டவெளியில் ஏன் கொண்டு வருகிறீர்கள்? நீங்கள் நடைபோடும் பயணத்தில் இது சறுக்குப்பாறை என்று ஏற்பீர் ஐயுறும் வண்ணம் இது உங்களைப் பின் தள்ளி விடுமாயின் வேறு வழியில் முன்னேறுவோம்.

முன்னேற்றமே நமது இலக்கு!

விடுதலையே நமது வேள்வி!

அதுவிடுத்து, உங்கள் சக்திகளைச் சிதறடித்து நீங்கள் வழிகாட்ட வேண்டியதமிழினத்தைக்குழப்பத்தில் ஆழ்த்தி எதைச்சாதிக்கப் போகிறீர்கள்?

தமிழினத்தின் நீண்ட நெடிய வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள்!

ஆனுல்—

திக்குதெரியாக் காட்டிலன்றோ அவை திசை தடுமாறத் தொடங்குகின்றன.

'தங்கள் அரிமாத்தலைவன்தங்களைப்போன்றே பாய்ந்து தாக்கவில்லை' என்று நினைக்கின்றன.

வேகம் வேறு விவேகம் வேறு.

ஆனுலும் 'விவேக'த்திற்குள் 'வேகம்' அடக்கம்தானே?

விவேகமான அமைதிக்குப்பின் வேகமான புயல் இருக்கமுடியாதென்று யார் சொன்னது?

ஏன் உம்மவர் மத்தியில் தேவையற்ற சலசலப்பு இப்போது.

சிதறிப்போன எருதுகள் சின்னுபின்னமான பஞ்சதந்திரக்கதை மறந்தா போனது?

தந்திரங்களுக்கு பஞ்சம் வந்தது போல்,

ஏன் வல்லடி வம்புகள்?

சொல்லடி அம்புகள்?

பேனுமுனைக் கணைகள்? உங்களுக்குள்ளேயே?

'அரசியலை அரசியல் ரீதியாகச்சந்திக்கஇறுதி வாய்ப்பு தருவோம்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நினைக்கிறது என்றே தமிழ்கூறும் நல்லுலகம் நினைக்கிறது இது அரசியல்தந்திரத்தில் இறுதியான அமைதிவழி உபாயமாகவும் இருக்கலாம்!

அடக்கும் ஏகாதிபத்தியத்தை பீறிட்டுக் கிளம்பும் விடுதலை உணர்வுபுயல் வேரோடும் வேரடி மண்ணுேடும் வீழ்த்தும்—அதுகாலக் கட்டாயம்,

ஆனுல் கட்டாயங்களுக்கும் 'கட்டங்கள்' உண்டுதானே?

'அரசியல் நிர்ணய சபையை தமிழர் விடுதலைக் கூட்டணி புறக்கணித்ததே தவறு' என்று கூடத்தான் கருத்து நிலவுகிறது.

'தமிழினம் மிகவும் வலிமைவாய்ந்த எதிரியின் நேரடித்தாக்குதலில் அழிந்தது என்பதைவிடவும் ஒற்றுமையின்மையினுல் சிதறிச் சின்னுபின்னுமானது—என்பதே வேதனையான உண்மையாகும்.

'உரிமைப் போர்.

வாய்மைப்போர்.

நேர்மைப்போர்'—என்று விடுதலைப் போரில் அணிவகுக்க வேண்டிய நீவிர், 'மைப்' போரில், ஏன் இப்போடு ஈடுபடுகிறீர்?

ஔவை வசழ்ந்த தமிழ் மண்ணிலிருந்துவந்த எனது ஐயவினு இது?

"சோழனும் சோழனும் பொருதினுல் தோற்றுப புலிக்கொடியே' என்ருள் ஔவை, எனவே தெளிவீர்!' 'தமிழனும் மோதினுல் தாழ்வது தமிழினமே?

## திரு. கி. அருளழகன் M.A.[Litt]

நேச உள்ளங்களே! தமிழ்ப்பாசத்தால்வேண்டுதல் செய்வேன்.

தமிழ்கூறும் நல்லுலகம் எதிர்நோக்கி நிற்பதெல்லாம், வரவேற்கக் காத்திருப்பதெலாம் ஈழத்துமண்ணில் எதார்த்தமான விடுதலைப்பூ வாசத்தையே அன்றி வேறெந்த வாசத்தையும் அல்ல!

ஈழத்தமிழரின் மண்ணும் ஈழத்தமிழர் வசியும் வளன்களும் முழுமையாகக் காக்கப்படுவது மெத்தவும் அவசியம்.

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி, இதனைக் கருத்தில் கொண்டே இயங்குவதாக எமக்குப் படுகிறது. இதனைப் பரிசீலனைச் செய்யவேண்டும் என்பதற்கேனும் அவகாசம் தராமல். சலசலப்பு செய்து 'மாற்ருரின் ஏளனப் பொருளாய், இலகுவான இலக்குப்பொருளாய்'—ஆகிட வேண்டாம் என்று தமிழினப் பற்றின் காரணமாய் தமிழ்ப்பற்ருளர் அனைவரையும் பதறிப்பதறி கேட்கின்றேன்.

(அடுத்த இதழில் முடியும்)

# இலங்கை நாவலருக்கு இனிய பாராட்டுக்கள்

# வழங்குகிறார் கலைஞர்

பெரும்பான்மை ஒன்றுமட்டுமே ஜனநாயகத்தின் இலக்கணமாகி விடுவதில்லை. சிறுபான்மையாக விளங்குகிற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டும்கணக்கிட்டு அவர்களின் நல்ல கருத்துக்களைப் புறக்கணித்து விடாமல் அவற்றையும் சிந்தித்துச்செயல்படுவதுதான் ஜனநாயகம் சிறந்தோங்கச் செய்திடும் வழியாகும்!



இந்தியாவில் அவசரச் சட்டமும் நெருக்கடிக் காலப் பிரகடனமும் அரசியல் கட்சித் தலைவர்கள் கைதும்—என்றஒரு நிலைவந்தபோது அதனை மறுத்துரைக்கவும், நெருக்கடிப் பிரகடனத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தவும் நமது கழகம் தயங்கவில்லை.

ஆனால் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சிக்மகளூர் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராக அமர்ந்த பிறகு அவரது பதவியைப் பறித்துக்கொண்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றியது, மிகக்கடுமையான முடிவு என்பதையும் ஜனநாயகத்திற்கு அழகல்ல என்பதையும் நமது கழகம் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

தனிப்பட்ட நபர்கள் அல்ல: கொள்கை ரீதியாக அணுக வேண்டிய முறைகள்தான் முக்கியம் என்ற கருத்துடன்தான் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நமது கழகம் எமர்ஜன்சியையும் அதன் தொடர்பாக அரசியல் தலைவர்கள் சிறைப்பட்டதையும் ஜனநாயக அடிப்படையில் எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய கடமையைத் துணிவுடன் ஆற்றியது!

அதே ஜனநாயகம் ஜனதா ஆட்சியில்கேலிக் கூத்தாக்கப்பட்டது மட்டுமல்லாமல் திருமதி இந்திராகாந்தியையும் அவரைச் சார்ந்தோரையும் பழிவாங்குவது என்பதற்காப் பலியிடப்பட்ட போது அந்தச் செயலையும் நமது கழகம் கண்டிக்கத் தவறவில்லை.

இதோ இந்தியாவில் பெரும்பான்மை பலத்தைக்கொண்டு திருமதி இந்திரா காந்தி அவர்களின் நாடாளுமன்றப் பதவியைப்பறித்து வெளியேற்றியது போலவே இலங்கையிலும் ஒரு நிகழ்ச்சி எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது!


திருமதி பண்டாரநாயகா மீது சில குற்றங்களைச் சுமத்தி அவரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றியதும் அல்லாமல்: ஏழாண்டுகாலம் தேர்தலில் நிற்கக்கூடாதென்றும் தீர்மானத்தை இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள்!

இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்மக்களின் தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தனது தமிழர் விடுதலை முன்னணிக்கட்சியின் சார்பில்—அந்த ஜனநாயக விரோதத்தீர்மானத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்!

திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும்— நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் இயங்கும் தமிழர் கட்சிக்கு ஏற்பட்ட துன்ப துயரநிகழ்ச்சிகளையும் இப்போது அந்தக் கட்சியினர் எண்ணிப்பார்த்துக் கொண்டிருக்கவில்லை!

திருமதி பண்டார நாயகா அவர்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைஜனநாயகத்திற்கு ஏற்றதாகாது என்பதை அங்குள்ள தமிழர் கட்சி உறுப்பினர்களும் அதன் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பது ஜனநாயக வாதிகள் அனைவரும் வரவேற்கத்தக்க வரலாற்று வரிகளாகும்!

நல்ல கொள்கைகள் நிலைக்க வேண்டுமென்பதற்காகவும்—பழிவாங்கும் படலங்களை மறந்துவிட்டு மக்களைப் பரிபாலிப்பதில்அரசாங்கம் நாட்டம் செலுத்திட வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காகவும் – மக்களாட்சித் தத்துவத்தின் மாண்புகளையாராயிருந்தாலும்மிதித்துத் துவைத்துவிடக்கூடாது என்பதற்காகவும் — பழைய பகைமை உணர்வுகளையெல்லாம் மறந்துவிட்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் திருமதி பண்டர நாயக்காவை வெளியேற்ற வழிசெய்ததீர்மானத்தை எதிர்த்துக்குரல் கொடுத்தமிழர் கட்சிக்கு நமது பாராட்டுதல்கள்!



நெருக்கடி காலத்தில் நடந்தவைகளை கெட்ட கனவுகளா எண்ணி மறந்து விடுவோமெனக்கூறி, இந்திரா காந்தி அம்மையார் மீது ஜனதா அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகளை ஜனநாயக அடிப்படையில் கண்டித்து. அவர்களின் தலைமைக்கு ஆதரவுதர முன்வந்த நமது கழகத்தின் நல்ல முடிவை, நாட்டு நலனிலும் ஜனநாயகத் தத்துவத்திலும் பற்றுள்ள அனைவருமே வரவேற்றுப் பாராட்டினர்!

நபர்களை வைத்துக் கொள்கைகளை வகுக்காமல் நாட்டு நலனையும் ஜனநாயகஇலக்கணத்தையும் மையமாக வைத்துக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நமது கழகச் சார்பில் இலங்கைத் தமிழர்களின் தலைவர் அமிர்தலிங்கனார்மேற்கொண்ட பண்பார்ந்த ஜனநாயகப் போக்கிற்குப் பாராட்டுக்களைக் குவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்!

# தினபதியின் தெரியாத்தனம்

தினபதி பத்திரிகையின் 15-10-80ம் திகதி இதழின் அத்தாணிமண்டபத்தில் தமிழ் நாட்டில் தனிநாயகம் என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்த விடயத்தைப் பார்த்ததும் பெரும் அவமானமாக இருந்தது.

இலங்கையின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு. டொமினிக் ஜீவா என்ன சொல்கிறார் என்று பாருங்கள் என பின்வருமாறு அதில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"முதன் முதலாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதற்கு முன்னோடியாக விளங்கியவர் இலங்கை நெடுந்தீவைச் சேர்ந்த தனிநாயகம் அடிகளார் ஆவார். அவர் செப்டம்பர் 3 ஆம் திகதி இலங்கையில் மறைந்தார். (3 9 1980)

அவர் மறைந்தபோது நான் சென்னையில்தான் இருந்தேன். இன்றுவரை (5 10 1980) அவர் மறைந்த செய்தியை இந்தியாவில் உள்ள ஒரு தமிழ்ப் பத்திரிகை கூட வெளியிடவில்லை.

இப்படிக் கூறியிருக்கிறார் திரு. டொமினிக் ஜீவா இந்தக் குறைபாட்டைச் சுட்டிக் காட்டியதற்காக திரு. டொமினிக் ஜீவா பாராட்டப்பட வேண்டியவராகிறார்.

இவ்வாறு அரசகேசரி யார் அத்தாணிமண்டபத்தில் எழுதியிருப்பதை பார்த்து அவமானப்படாதிருக்க முடியுமா?

தவத்திரு தனிநாயகம் அடிகளார்காலமானது செப்டம்பர் 1ம் திகதி இரவு 7.30மணிக்கு இதுவே உண்மை. அடிகளார் காலமான செய்தியை தமிழ் மக்களின் நலனுக்காக சேவை செய்யும் 'ஈழநாடு' 'வீரகேசரி' ஆகிய பத்திரிகைகள் மறுநாளே (2.9.1980) முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

ஆனால் தினபதி பத்திரிகையோ தனிநாயகம் அடிகளாரை பொருட்படுத்தவில்லை. காரணம்—கொள்கை முரண்பாடு. இலங்கை தமிழ் இனத்தின் அழிவுக்கு வழி வகுப்பது தினபதியின் கொள்கை. உலகத் தமிழ் இனத்தின் விடிவுக்கு வழிவகுப்பது தனிநாயகம் அடிகளாரது கொள்கை.

இதனால் அவரைப் பற்றி பொருட்படுத்தாது இருந்துவிட்டு இறந்துமூன்றும் நாள் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட தினத்தன்றே 3.9.1980 அவர் இறந்த செய்தியை தினபதி வெளியிட்டிருந்தது ஆச்சரியம்தான்.

தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார் மறைந்த செய்தியை இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகள் ஒன்றேனும் பிரசுரிக்கவில்லையெனக் குற்றம்சாட்டும் திரு. டொமினிக் ஜீவாவின் கூற்றை அப்படியே காபபி அடித்து வெளியிட்ட அரச கேசரியாருக்கும் அடிகளார் இறந்த செய்தி தெரியாமற் போனது விந்தைதான்

இதுமட்டுமல்ல அடிகளாரின் மறைவுச்செய்தியை தமிழ் நாட்டின் தினசரி ஏடுகளில் ஒன்றான முரசொலி (3 9 80) வெளியிட்டதை மூடிமறைக்க முயல்வதோடு அதற்குத் துணையாக மதுரைப் பல்கலைக் கழக இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேராசிரியர் கலாநிதி. எம். எம் உவைஸ் அவர்களையும் துணைக்கழைத்திருப்பதுதான் வேதனையைத் தருகின்றது.

—செ. செந்தில்குமாரன்
வேலணை.

அடுத்த இதழில்

உணர்ச்சிக் கவிஞர்

**காசி ஆனந்தன்**

எழுதும்

**சிவகுமாரன் காவியம்**

ஆரம்பமாகின்றது.

# பேயரசு செய்தால்
## பிணம் தின்னும் சாத்திரங்கள்!



அடிமை இருள் இந்திய அரசியல் வானில் அப்பிக்கொண்டிருந்த நேரம் அது!

இருளை விரட்டியடிக்க இரண்டு ஒளிப் பிழம்புகள் தோன்றின!

ஒன்று—குளிர்ந்த நிலவான கோகலே! இன்னென்று—தீய்க்கும் கதிர்களை வீசி எறியும் சூரியனை திலகர்!

திலகரின் கதிர்பட்டுத் தின வெடுத் தவர்களில்தென்னாட்டுக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியும் ஒருவன்!

எட்டியபுரத்து இடி அவன்!

இந்த இடி போட்ட போராட்ட விடுதலை முழக்கம் கேட்டு கண்விழித்தோர் பலர்.

அயோத்தி இராமன் கால்பட்டு அகலிகை உயிர் பெற்ருள ம்—அதுபோல-

பண்டிதர் வீட்டுப்பரணிலிருந்த பைந்தமிழ்க் கவிதைப் பெண் பஞ்சு மெத்தை கிடைக்கப் பெற்ருள்!

சுதந்திரப் பெண்ணும்- சுந்தரக் கவிதைப் பெண்ணும் சுடர் முகம் தூக்கினர்— சுப்பிரமணியபாரதிக்கு சொல் லொ ணு மகிழ்ச்சி!

அந்நேரம்தான்—அந்த அறிவிப்பு அரவக் கொடியோனின் வாயிலிருந்து துள்ளிப்பாய்கின்றது.

ஐவரை வீழ்த்தி விட்டோம் என்ற வெறியில் ஆடிக்கொண்டிருந்த அவன்—

'யாரடா தேர்ப்பாகன் நீ போய்க்கணமிர ண்டில்
பாரதர்க்கு வேந்தன் பணித்தான் எனக் கூறிப்
பாண்டவர் தந் தேவிதனைப் பார்வேந்தர் மன்றினிலே
ஈண்டழைத்துவா' என்றியம்பினன்'

பாம்பின் சீற்றம்— பாகனைப் பாய்ந்தோடச் செய்கிறது பாஞ்சாலியின் மாளிகையை நோக்கி!

செய்தி கேட்ட சேயிழையாள் ஒரு கணம் சிந்திக்கின்ருள் .........பின்...... கேள்விக்கணையா ல அவனைத்துளைத் தெடுக்கின்ருள்!

'நல்லது; நீ சென்று நடந்தகதை கேட்டுவா
வல்ல சகுனிக்கு மாண்பிழந்தநாயகர் தாம்என்னை
முன்னே கூறி இழந்தாரா? தம்மையே முன்ன
மிழந்து முடித் தென்னைத் தோற்ருரா?'

ஊராளும்மன்னன் அழைக்கின்ருன்—உடனே நான் செல்லவேண்டுமென்று அவள் உள்ளம்நினைக்கவில்லை!

இதனைக் கண்ணுற்ற அந்நாட்டு மக்கள் நெட்டைமரங்களாக நிற்கின்றனர்—பெட்டைப் புலம்பல் அவர்களுக்குப் பெரிதாகக் கேட்கவில்லை:

இதனை நம் கவிஞன்—

ஊரவர்தம் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமில்லா நாய்கள் விலங்காம் இளவரசன்

என்று காறி உமிழ்கின்ருன்!

மன்னன் அவைக்குக் கொண்டுவரப்பட்டமங்கையர்திலகம் பாஞ்சாலியை துச்சாதனன் தொடர்ந்து தூஷித்துக்கொண்டே இருக்கிருன்— அவள் குலுங்கி அழுகின்ருள்......கணவன்மாரோ அவற்றைக் காதில் வாங்கிக் கொண்டு கல்லாகச் சமைந்து இருக்கின்றனர்.

பாஞ்சாலியின் ஆத்திரம் இப்போது பாண்டவர்பக்கமே திரும்புகிறது!

உங்களையா நான் கணவர்களாகப் பெற்றேன்...... அவள் உள்ளம கேட்கிறது— இல்லை —குமுறுகிறது!

அத்தாணி மண்டபம் வழக்கு மன்றமாகின்றது, வாதப் பிரதிவாதங்கள் எடுத்து வைக்கப் படுகின்றன'

தையல் தனியே விடப்படுகின்ருள்.

என்ருலும் அவனுக்குத் திருப்திஏற்படவில்லை படைப்புக் கடவுள் அல்லவா?

இன்னுமொருஏந்திழையைப் படைக்க வேண்டுமென்ற ஆசை அவன் இதயத்தில் ஏறிக் குந்திக் கொண்டது!

பாஞ்சாலி என்ற ஒரு பெண்படைக்கப்பட்டாள்!

கேவலம்—பஞ்சவர்க்கடங்கிய அஞ்சுகமாக வல்ல—உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஒரு பெண்ணுக— காவலன் நெடுஞ்செழியனிடம் நீதிகேட்டாளே கண்ணகி — அந்தக் கனற்பிழம்பின் சாயலாக!

இதோ— பாரதியே அந்த அற்புதமான பெண்ணை நம்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்ருன் – பாருங்கள்.

சூழ்ச்சிக்காரன் சகுனியிடம் சூதாடித்தோற்றுப்போயிருக்கின்ருன் தருமன்— துரியோதனன் மாளிகையில்!

ஆட்டத்தில் அவன் இழந்தது ஆயிரமாய் இருக்கலாம் ஆனல்—அருமை உடன் பிறப்புக்களையும்— ஆருயிர் மனைவியையுமல்லவா அந்நியரிடம் அடிமைகளாக்கி விட்டான்!

அவமானம் அவனை அணு அணுவாகக் கொல்லுகிறது! தளிர் வாடியது போலாஞன் தருமன்—தலைகவிழ்ந்து போயிற்று!

ஆமாம்—முதல்நாள் போரில் இராமனிடம் முழுமையாகத் தோற்றுவிட்ட இராவணன், போர்க்களம் விட்டுத்திரும்பும் போது—

'பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்' என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் பாடினனே— அப்படி ஆயிற்று தருமன் நிலை!

தன்னைச் சூதில் வைத்திழந்த தருமன் என்னைச்சூதில் வைத்திழக்க என்ன தகுதிஇருக்கிறது?

இது அவள் கேள்வி — நியாயம்தானே?

விஞக்களை துரத்த—பாகன் வேந்தனிடம் விரைகின்ருன்.

நடந்ததைக் கேட்ட நச்சரவோன்— கதை வேண்டாம்— அந்தக் காரிகையை இழுத்துவா என்று கர்ஜிக்கின்ருன்;

பாவம்—பாகன்— மீண்டும் பாஞ்சாலியிடம் திரும்புகின்ருன்!

இப்போதும் பாஞ்சாலிஇன்னுமொரு கேள்வியை எழுப்புகின்ருள். அதில் உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கின்றது— சுதந்திரப் பொறிபட்டுத் தெறிக்கின்றது!

தன்னிலை தாழ்ந்த தருமன் என்னைத் தாரமாகக் கொள்வது எப்படி? தனிஒருநாடு வைத்தாளும் தார் வேந்தன் துருபதன் மகள் நான்— அந்நாட்டின் இளவரசி—அடிமை என்ற பேச்சுக்கே இடமில்லை!

பாஞ்சாலியின் வார்த்தைகளுக்கு பாகனல் பதில்சொல்ல இயலவில்லை... பறக்கின்ருன் மன்னன் அவை நோக்கி!

அரவக்கொடியோனை ஆத்திர நெருப்புதகிக்கின்றது! துச்சாதனனை அழைக்கின்ருன்...... தோகையைப் பிடித்து இழுத்துவா என்கின்ருன்...... அவன் அண்ணனின் இச்சையை மெச்சி ஏகின்ருன்...

அங்கே—விவாதம் நடக்கின்றது— வீணனுக்குப் பொறுக்கமுடியவில்லை— பூங்கொடியைப் பிடித்துப் புழுதிபுரள பூமியெலாம் இழுத்து வருகின்ருன்!

துரியோதனுக்குத் துணையாக வீட்டுமர் கச்சை கட்டுகின்ருர்;

பெண்ணரசியின் வாதங்கள் பேரறிவாளர்களையே திகைக்கச் செய்கின்றன!

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்கிருள் அவள் ஆவேசமாக!

உண்மைதானே!

தெய்வம் போலிருக்க வேண்டிய தேசத்தலைவர்கள்— பயங்கரப் பேயாக மாறினல்— நாடு பலிக்களமாகவே ஆகிவிடும்'

அதன்பின்......நீதி நியாயம் என்று பேசுவதெல்லாம் என்ன அர்த்தமிருக்கப் போகின்றது?

பார்த்தீர்களா... பாரதி எவ்வளவு அழகாக பாஞ்சாலியின் வாயினல் எதேச்சதிகாரத்தின் விளைவுகளை எடுத்துக்காட்டுகிருன்!

**--வாகரை வாணன்**

## பயணம் நிற்பதில்லை



நாம் உண்மையானஜனநாயகத்திலே பற்று மிகுதியாகக் கொண்டுள்ளதால்தான் நமது கடமையைச் செய்வதிலே எத்தனை இன்னல் ஏற்படினும் பொறுத்துக் கொள்கிறேம்.

எத்தனை இழி மொழிகளை—பழிச்சொற்களை தாங்கிக் கொள்கிறேம்.

பறந்து செல்லும் காக்கை எச்சமிடுகிறது: பாதையிலேசெல்பவனின் பட்டுச்சட்டை பாழ்படுகிறது. அதனுல் பயணம் நில று விடுவதில்லை.

—அறிஞர் அண்ணு

# மந்திரி இராசதுரை மட்டக்களப்பை மறந்துவிட்டாரா?

## இந்துசமய விருத்திச் சங்கம் எழுப்பும்வினு!

மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் இந்து சமய விவகார அமைச்சராக சனுதிபதி அவர்களால்நியமிக்கப்பட்ட போது எங்கள் மட்டக்களப்பு இந்து சமய விருத்திச்சங்கம் அமைச்சருக்குப் பாராட்டுக் கடிதம் அனுப்பிவைத்தது, அதைத் தொடர்ந்து இலங்கையடங்கிலுமுள்ள இந்துக்களுக்கும், மட்டக்களப்பு வாழ் இந்துக்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதுமான பதினுன்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டது இவ்வாறு அனுப்பப்பட்ட கோரிக்கைகள்செய்தித் தாள்களில் கூட வெளிவந்துமுள்ளது.

எமது சங்கக் கோரிக்கை பற்றி அமைச்சரிடமிருந்துஎது வித தகவலும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. சில வேளை எமது கோரிக்கைகள் அமைச்சரால் நடைமுறைப்படுத்த ஏலாத ஒன்ருக இருக்கலாமென்று நான் நினைத்திருந்தேன். ஆனல் சமீபகாலமாக இலங்கையின் பல பகுதிகளுக்கும் சுற்றுலாச் செய்து கொண்டுவரும் அமைச்சர் திரு; செ. இராசதுரை அவர்கள் இந்துசமய கலாச்சார மண்டபங்களைக் கட்டித்தருவதாகவும் இந்துசமய நிலயங்களை நிறுவ பணம் ஒதுக்கித் தருவதாகவும் வாக்குறுதியளித்துள்ள பலசெய்திகள்பத்திரிகைகள் வாயிலாகப் படித்தறிய முடிந்தது. மலைநாட்டிலும் மன்னரிலும் இத்தகைய உறுதிமொழிகள் பகரப்பட்டு அவை செயற்படுமானல் இந்துக்களின் பேரால் இது மகிழ்சியடையக் கூடிய விடயமாகவே இருக்கும். எமது சங்கமும் இதையிட்டுப் பாராட்டுத் தெரிவிக்கும்.

இருந்தும் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் எமது இந்துசமய விவகார அமைச்சருக்கு நான்கையொப்பமிட்டு அனுப்பிவைத்த கோரிக்கைகளில் ஒன்ருன மட்டக்களப்பில் இந்து கலாச்சார மண்டபம் ஒன்று நிறுவ வேண்டும் என்ற எமது கோரிக்கையை அமைச்சர் ஏன் ஏற்காது விட்டார் என்று எனக்கு விளங்காத ஒன்ருக இருக்கிறது. அமைச்சருடைய சொந்த ஊரில்—சொந்தத் தொகுதியில்—அவர் பல வருடங்களாக பாராளுமன்றம் போக வழிவகுத்த மட்டக்களப்பு மண்ணில் இந்து சமய கலாச்சார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சர் தயங்குவது எமக்கு—எனக்கு வேதனையாக இருக்கிறது.

மட்டக்களப்பில் இந்து சமயத்தவருக்கு நன்மைதரக் கூடிய ஒரு கலாச்சார நிலயம் தன்னல் அமைக்க ஏலாது—நிதிஒதுக்க ஒண்ணது என்றல்! மட்டக்களப்பு இந்துக்களுக்கு ஏன் இந்த மாற்ருந்தாய்ப் பிள்ளை நிலை—புறக்கணிப்பு என்று கேட்க விரும்புகிறேன்.

முன்னைநாள் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரும் இப்போதைய இந்து விவகார அமைச்சருமான திரு. செ. இராசதுரை அவர்கள் மலைநாட்டிலும் மன்னர்—திருக்கேதீஸ்வரத்திலும் இந்து நிலயங்களை நிறுவ பணம் ஒதுக்கி ஆவன செய்ய முன்வந்ததுபோல எமது மட்டக்களப்பிலும் இந்து சமய மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் ஓர் இந்து சமய நிலயத்தை நிறுவிஉதவ வழிவகை செய்ய வேண்டுமென்று இந்துசமய இயக்கமொன்றின் செயலாளர்என்ற வகையில் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சங்கத்தின் பதினுன்கு கோரிக்கைகளில் ஒன்ருன இதை முதலில் இந்துசமயவிவகார அமைச்சர் செய்துதர வேண்டுமென்பதேஎனதுஅவாவாகும். செய்வாரா?

இவ்வாறு மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கச் செயலாளர் திரு.வி. த. குமாரசாமி தமது அறிக்கையில்கேட்டிருக்கிருர்.

## விடுதலை இயக்கத்தின் வீரவாள்!

ஈழத் தமிழகத்தின் இருளகல, தமிழ் மக்களின் இதயங்கள் சிறகடித்து ஆனந்திக்க எமது கட்சி ஏடான 'உதய சூரியன்' செக்கர் வானத்தில் உதித்தெழுந்தது.

எமது கட்சிக்கு இந்த ஏடு வீரவாள்போன்றது. வெற்றி முரசம் போன்றது. தமிழ் மக்களின் இதயநாதம் போன்றது.

தினமும் இரித்து எழுதுவதையே பத்திரிகா தர்மமாக கொண்டு சில பத்திரிகைகள் எந்நாளும் தமிழினத்தை கேவலப்படுத்துவதையே தொழிலாக செயலாற்றும்பொழுது தமிழினத்தின் உண்மை நிலையையெடுத்துக்கூற எமது கட்சிக்கு 'உதயசூரியன்' அவசியம் வேண்டுவதொன்ருகும்.

திரிபுவாதிகளும். தான்தோன்றிகளும் தமிழ் மக்களின் மனங்களைக் கலைத்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் புத்தொளி வீசி புத்திபுகட்டவோர் பத்திரிகை நமக்கு அவசியம்.

இச்சகம்பேசி அற்பசலுகைகள் பெற்று அன்னைதமிழை அடகுவைக்கவோர் வியாபாரக் கும்பல் முனைந்து நிற்கும் இவ்வேளையில் அன்னை பூமியைக் காத்து, மானத்தைப் பேணவோர் நாளிதழ் நற்றமிழருக்கு அவசியம்.

உதயசூரியன்' தமிழினத்தின் இன்னலகற்றும் இதய சூரியனுக மலரட்டும்.

அறப்போர் வழிநிற்கும் மறத்தமிழ் வீரருக்கு போர் வாளாக விளங்கட்டும்.

சே. மா. செல்லத்தம்பு
பா. உ. முல்லைத்தீவு

## கூட்டணியினரை திருத்தவே பள்ளிக் கூடமாம்!

அண்மையில் சிற்ருண்டியில் பாடசாலை ஒன்றைத் திறந்துவைப்பதற்காக நடைபெற்றகூட்டத்தில் அமைச்சர் தேவநாயகம் பேசும் போது, த. வி. கூட்டணியினரைத் திருத்துவதற்காகவே இந்தப்பாடசாலையை இங்கே அமைத்துள்ளேன். என்றுகூறினராம்!

பிள்ளைகளின் நலன் கருதிப் பாடசாலை அமைக்கப்படவில்லை என்பதை திரு தேவநாயகம் இதன்மூலம் மறைமுகமாகவே ஒத்துக் கொள்ளுகிருர் போலும்.

47 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் இப்பள்ளிக்கூடம்—பார்ப்பவர்கள் 10 லட்சம் கூட பெருது என்கிருர்கள்.

எல்லாம் மந்திரிக்குத்தான் வெளிச்சம்!


எங்களிடம் எல்லாவிதமான பலசரக்குச் சாமான்கள் விற்பனைக்குண்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

திருமுருகன்
களஞ்சியம்

ரொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும் இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின் ஏகவிற்பனையாளர்கள்

துர்க்கா ஒட்டோ காட்வெயர்ஸ்

11, ஸ்ரான்லிரேட்
யாழ்ப்பாணம்.

"பனம் விதைகள் இலவசம்"

பனம் விதைகள் நட்டு உண்டாக்க விரும்பும் முளங்காவில் பகுதி, வவுனியா, கிளிநொச்சி பகுதி, குடியேற்றப் பகுதிகளுக்கும், பொது மன்றங்களுக்கும் இலவசமாகக்கொடுத்துதவயாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் முன்வந்துள்ளார். விரும்புவோர் விண்ணப்பம் செய்தால் இலவசமாக அனுப்பி வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்ருர்கள்.

சாந்தி (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30, 9-30

100 வது நாளை நோக்கி...
வெற்றி நடை போடுகிறது!

கமலஹாசன், ஸ்ரீபிரியா, விஜயகுமார், மஞ்சுளா, ரவிச்சந்திரன், லதா, முத்துராமன், தீபா, எம். என். நம்பியார், தேங்கணேஷ், ஸ்ரீகாந்த் சுருளிராஜன் நடித்த

நீயா?

தன் காதலனை சுட்டுப் பொசுக்கிய ஆறு இளம் வாலிபர்களை பழிவாங்கத் துடித்த இச்சாதாரிப் பாம்பின் கதை.

(வயது வந்தவர்களுக்கு உகந்தது)

ராஜா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30 9-30

10 வது வாரமாக
வெற்றி நடை போடுகிருன்......

ஜெய்சங்கர், ஜெயசித்ரா, ரோஜாரமணி, அசோகன், எம் ஆர். ராதா, எஸ். பி. சுப்பையா, பண்டரிபாய் நடித்த

அறிஞர் அண்ணுவின்

வண்டிக்காரன் மகன்

(ஈஸ்ட்மன் கலர்)

திரைக் கதை வசனம் கலைஞர் — மு. கருணுநிதி


உதய சூரியன் வெளியீட்ட கத்தால்நல்லூர் சண்முகாபதிப் பகத்தில் 31-10-80 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.